**நீதித்துறை நடுவர் நீதிமன்றம், தேவகோட்டை.**

**முன்னிலை:- செல்வி. D. பூர்ணிமா, B.A.B.L.(Hons.),LL.M.,**
**நீதித்துறை நடுவர், தேவகோட்டை.**

**2026 ம் ஆண்டு ஜுன் திங்கள் 30-ம் நாள் செவ்வாய்கிழமை**
**திருவள்ளுவராண்டு 2057 விசுவாவசு வருடம் ஆனி திங்கள் 16-ம் நாள்**

**ஆண்டுப்பட்டிகை வழக்கு எண். 333/2022**
(குற்ற எண்.65/2022, ஆறாவயல் காவல் நிலையம்)

அரசுக்காக,
காவல் உதவி ஆய்வாளர்,
ஆறாவயல் காவல்நிலையம்,
குற்ற எண்.65/2022.

....குற்றமுறையிடுபவர்

/எதிராக/

1.பாண்டியன் (1 வது எதிரி) (49/2022)
த/பெ. சங்கரன்

2. காளிமுத்தன் (எ) காளிமுத்து (2 வது எதிரி) (72/2022)
த/பெ. முதுவயிறு

3. முருகன் (எ) முருகேசன் (3 வது எதிரி) (50/2022)
த/பெ. சின்னச்சாமி

4. பாண்டி (4 வது எதிரி) (50/2022)3
த/பெ. சின்னச்சாமி

5. மாயழகு (5 வது எதிரி) (57/2022)
த/பெ. கருப்பையா

6. பூமாதேவி (6 வது எதிரி) (52/2022)

க/பெ. மாயழகு

7. சொர்ணம் (7 வது எதிரி) (36/2022)

க/பெ. வீரப்பன்

8. பழனி (8 வது எதிரி) (51/2022)

த/பெ. கருப்பையா

9. சேகர் (9 வது எதிரி) (47/2022)

த/பெ. காசி

10. ராமச்சந்திரன் (10 வது எதிரி) (59/2022)

த/பெ. குருந்தப்பன்

.....எதிரிகள்

குற்றவியல் நடைமுறை விதிகள், 2019 விதி 106(4)ன் படி வழக்கின்

சுருக்கம்

| வ.எண் | விளக்கம் | விபரங்கள் |
|---|---|---|
| 1. | குற்றமுறையிடுபவர் | காவல் உதவி ஆய்வாளர்,<br>ஆறாவயல் காவல்நிலையம்,<br>குற்ற எண்.65/2022. |
| 2. | எதிரிகள் | 1.பாண்டியன் (1 வது எதிரி) (49/2022)<br>த/பெ. சங்கரன்<br><br>2. காளிமுத்தன் (எ) காளிமுத்து (2 வது எதிரி) (72/2022)<br>த/பெ. முதுவயிறு<br><br>3. முருகன் (எ) முருகேசன் (3 வது |

| | | |
|---|---|---|
| | | எதிரி) (50/2022)<br>த/பெ. சின்னச்சாமி<br><br>4. பாண்டி (4 வது எதிரி) (50/2022)3<br>த/பெ. சின்னச்சாமி<br><br>5. மாயழகு (5 வது எதிரி) (57/2022)<br>த/பெ. கருப்பையா<br><br>6. பூமாதேவி (6 வது எதிரி) (52/2022)<br>க/பெ. மாயழகு<br><br>7. சொர்ணம் (7 வது எதிரி) (36/2022)<br>க/பெ. வீரப்பன்<br><br>8. பழனி (8 வது எதிரி) (51/2022)<br>த/பெ. கருப்பையா<br><br>9. சேகர் (9 வது எதிரி) (47/2022)<br>த/பெ. காசி<br><br>10. ராமச்சந்திரன் (10 வது எதிரி) (59/2022)<br>த/பெ. குருந்தப்பன்<br>**1 முதல் 10 வரையிலான எதிரிகளின் முகவரி:**<br>வழங்காவயல், சண்முகநாதபுரம், தேவகோட்டை தாலுகா, சிவகங்மை மாவட்டம். |
| 3. | குற்றச்சாட்டுகள் | 1 வது எதிரி மீது இதச பிரிவுகள் 147, 427, 294(b), 323 மற்றும் பிரிவு 4 of |

<table>
<tr><td></td><td></td><td colspan="3">TNPHW Act-ன் கீழும், 2, 5,6,7,8,9,10 வது எதிரிகள் மீது இதச பிரிவுகள் 147, 427-ன் கீழும் 3,4 வது எதிரிகள் மீது இதச பிரிவுகள் 147, 294(b), 427, 506(1)-ன் கீழும் குற்றம் சாட்டப்பட்டுள்ளது.</td></tr>
<tr><td>4.</td><td>சம்பவம் நடந்த நாள்</td><td colspan="3">08/07/2022</td></tr>
<tr><td>5.</td><td>முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்ட நாள்</td><td colspan="3">08/07/2022</td></tr>
<tr><td rowspan="2">6.</td><td>எதிரிகள் கைது செய்யப்பட்ட நாள்</td><td>இல்லை</td><td colspan="2" rowspan="2">முன்பிணை பெற்ற நாள்: 27/07/2022</td></tr>
<tr><td>பிணையில் சென்ற விபரம் மற்றும் நாள்</td><td>இல்லை</td></tr>
<tr><td>7.</td><td>குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்யப்பட்ட நாள்</td><td colspan="3">29/09/2022</td></tr>
<tr><td>8.</td><td>கு.வி.மு.ச பிரிவு 241-ன் கீழ் குற்றம் குறித்து வினவப்பட்ட நாள்</td><td colspan="3">23/05/2025</td></tr>
<tr><td>9.</td><td>கு.வி.மு.ச பிரிவு 317-ன் கீழ் தாக்கல் செய்யப்பட்ட மனுக்களை தவிர மற்ற மனுக்கள் தாக்கல் செய்யப்பட்ட விபரம் மற்றும் அதன் முடிவுகள்</td><td colspan="3">-----</td></tr>
<tr><td rowspan="4">10.</td><td rowspan="4">வழக்கின் சாட்சிகள் முதல் விசாரணை மற்றும் குறுக்கு விசாரணை செய்யப்பட்ட நாள்</td><td>சாட்சிகள்</td><td>முதல் விசாரணை</td><td>குறுக்கு விசாரணை</td></tr>
<tr><td>அ.சா.1</td><td>23/07/2025</td><td>23/07/2025</td></tr>
<tr><td>அ.சா.2</td><td>23/07/2025</td><td>23/07/2025</td></tr>
<tr><td>அ.சா.3</td><td>13/11/2025</td><td>13/11/2025</td></tr>
</table>

| | | | | |
|---|---|---|---|---|
| | | | | |
| | | அ.சா.4 | 13/11/2025 | 13/11/2025 |
| | | அ.சா.5 | 02/03/2026 | 02/03/2026 |
| | | அ.சா.6 | 27/04/2026 | 27/04/2026 |
| 11. | எதிரிகளிடம் குற்றம் குறித்து கு.வி.மு.ச பிரிவு 313(1)(ஆ)ன் கீழ் வினவிய நாள் | 06/05/2026 | | |
| 12. | எதிரிகளின் மீது பிடியாணை வழங்கப்பட்ட நாள் மற்றும் திரும்ப பெறப்பட்ட நாள் | பிடியாணை வழங்கப்பட்ட நாள் | பிடியாணை திரும்ப பெறப்பட்ட நாள் | |
| | | ------ | ----- | |
| 13. | வழக்கு விசாரணை தொடங்கிய நாள் | 23/05/2025 | | |
| 14. | வழக்கு விசாரணை முடிந்த நாள் | 06/05/2026 | | |
| 15. | தீர்ப்பு பகரப்பட்ட நாள் | 30/06/2026 | | |
| 16. | தீர்வு | **முடிவாக, 1 வது எதிரி இதச பிரிவு 294(b)-ன் கீழும், 3,4 வது எதிரிகள் இதச பிரிவுகள் 294(b), 506(1)-ன் கீழும் குற்றவாளிகள் அல்ல என்று தீர்மானித்து எதிரிகளை மேற்படி குற்றச்சாட்டுக்களைப் பொறுத்து பி.என்.எஸ்.எஸ் பிரிவு 271(1)-ன் கீழ் விடுதலை செய்து இந்நீதிமன்றம்** | | |

| | | |
|---|---|---|
| | | **தீர்ப்பளிக்கிறது. 1 முதல் 10 வரையிலான எதிரிகள் இதச பிரிவு 147, 427 ன் கீழ் குற்றவாளி என்று தீர்மானித்து எதிரிகளுக்கு இதச பிரிவு 147-ன் கீழான குற்றச்சாட்டிற்கு தலா ரூ. 2000/-ம் அபராதம் விதித்தும் அபராதம் செலுத்த தவறும் பட்சத்தில் 2 மாதம் மெய்க்காவல் சிறை தண்டனை விதித்தும், இதச பிரிவு 427-ன் கீழான குற்றச்சாட்டிற்கு தலா ரூ. 3000/-ம் அபராதம் விதித்தும் அபராதம் செலுத்த தவறும் பட்சத்தில் 2 மாதம் மெய்க்காவல் சிறை தண்டனை விதித்தும், 1 வது எதிரி இதச பிரிவு 323 மற்றும் பிரிவு 4 of TNPHW Act ன் கீழ் குற்றவாளி என்று தீர்மானித்து 1 வது எதிரி இதச பிரிவு 323 ன் கீழான குற்றச்சாட்டிற்கு ரூ.1,000/- அபராதம் விதித்தும்** |

| | | |
|---|---|---|
| | | **அபராதம் செலுத்த தவறும் பட்சத்தில் 1 மாதம் மெய்க்காவல் சிறைதண்டனை விதித்தும், 1 வது எதிரி பிரிவு 4 of TNPHW Act ன் கீழான குற்றச்சாட்டிற்கு ரூ.10,000/- அபராதமும் 8 மாதம் மெய்க்காவல் சிறை தண்டனை விதித்தும் அபராதம் செலுத்த தவறும் பட்சத்தில் மேலும் 2 மாதம் மெய்க்காவல் சிறைதண்டனை அனுபவிக்க வேண்டும் என்றும், பி.என்.எஸ்.எஸ் பிரிவு 271(2)ன் கீழ் உத்தரவிடப்படுகிறது.** |

இந்த வழக்கானது என் முன்பாக இறுதி விசாரணைக்கு வந்தபோது குற்றமுறையிடுபவர் தரப்பில் அரசு வழக்கறிஞர் நிலை 2 அவர்கள் முன்னிலையாகியும், எதிரிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு.சிவா, அவர்கள் முன்னிலையாகியும், இருதரப்பு வாதங்கள் கேட்கப்பட்டும், வழக்காவணங்களை பரிசீலனை செய்தும், இதுநாள் வரை இந்நீதிமன்ற சீரான பரிசீலனையிலிருந்து வந்து இன்று இந்நீதிமன்றம் வழங்கும்

<u>**தீர்ப்புரை**</u>

**1. குற்றமுறையீட்டின் சுருக்கம்:-**

கடந்த 08.07.2022 ம்தேதி காலை சுமார் 11.00 மணியளவில் வலங்காவயல் கிராமத்தைச் சேர்ந்த எதிரிகள் 10 பேரும் சேர்ந்து 1 வது எதிரி பாண்டியனுக்கு ஆதரவாக சட்ட விரோதமாக ஒன்று கூடி அனைவரும் சேர்ந்து 1 வது சாட்சியின் குடும்பத்தார் முறையாக பத்திரபதிவு செய்து அனுபவம் செய்து வரும் சர்வே எண்.137/4-ல் உள்ள கல்லுக்கால்களை உடைத்து சேதப்படுத்தியதை பார்த்த 1 வது சாட்சி ஐயப்பன் மற்றும் அவரது மனைவி 2 வது சாட்சி சிவரஞ்சனி ஆகிய இருவரும் எதிரிகளை பார்த்து ஏன் இப்படி அராஜகம் பண்றீங்க என கேட்டதற்கு 1 வது எதிரி பாண்டியன் 2 வது சாட்சியை பார்த்து அடியே தேவிடியா புண்டா மகளே என்ன தைரியம் இருந்தா எங்களையே எதிர்த்து பேசுவாய் என திட்டிக்கொண்டு பெண் என்றும் பாராமல் 2 வது சாட்சியின் இடது கண்ணத்தில் ஓங்கி அறைந்துள்ளதாகவும் 3 வது எதிரி முருகேசன் 4 வது எதிரி பாண்டி ஆகிய இருவரும் 1 வது சாட்சியை பார்த்து டேய் தேவிடியா புண்டா மயனே ஒழுங்கா மரியாதையா ஊரைவிட்டு ஓடிப்போயிடு இல்லைனா உன்னைய நாங்களே அடித்து கொன்று விடுவோம் என்று கொலைமிரட்டல் விடுத்த குற்றத்திற்காக 1 வது எதிரி மீது 147,294(b),323,427 IPC & 4 of TNPHW Act படியும், 3 வது எதிரி முருகன் என்ற முருகேசன், 4 வது எதிரி பாண்டி ஆகியோர் சட்டப்பிரிவு 147,294 (b),427,506(i) IPC படியும், 2 வது எதிரி காளிமுத்தன் என்ற காளிமுத்து, 5 வது எதிரி மாயழகு, 6 வது எதிரி பூமாதேவி, 7 வது எதிரி சொர்ணம், 8 வது எதிரி பழனி, 9 வது எதிரி சேகர், 10 வது எதிரி ராமச்சந்திரன்

ஆகியோர் சட்டப்பிரிவு 147,427 IPC குற்றம் புரிந்துள்ளதாக குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. வழக்கு கோப்பிற்கு எடுக்கப்பட்டு எதிரிகள் இந்நீதிமன்றத்தில் ஆஜரானதும் இவ்வழக்கு ஆவணங்களின் நகல்கள் அனைத்தும் கு.வி.மு.ச. பிரிவு 207 இன் படி எதிரிகளுக்கு இலவசமாக வழங்கப்பட்டது.

3. போதிய கால அவகாசம் கொடுக்கப்பட்ட பின்னர் 1 வது எதிரி மீது இதச பிரிவுகள் 147, 427, 294(b), 323 மற்றும் பிரிவு 4 of TNPHW Act-ன் கீழும், 2, 5,6,7,8,9,10 வது எதிரிகள் மீது இதச பிரிவுகள் 147, 427-ன் கீழும் 3,4 வது எதிரிகள் மீது இதச பிரிவுகள் 147, 294(b), 427, 506(1)-ன் கீழும் குற்றச்சாட்டுக்கள் வனைந்து விளக்கி வினவிய போது எதிரிகள் குற்றங்களை மறுத்துரைத்தார்கள். எனவே அரசு தரப்பு சாட்சியங்களின் விசாரணைக்கு உத்தரவிடப்பட்டது.

4. அரசுத்தரப்பில் அ.சா.1 முதல் அ.சா.6 வரையிலான சாட்சிகள் விசாரிக்கப்பட்டும், அ.சா.ஆ 1 முதல் அ.சா.ஆ.5 வரையிலான சான்றாவணங்களும் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

**5. அரசு தரப்பு சாட்சிகளின் சாட்சியங்களிலிருந்து தெரிய வரும் அரசு தரப்பு வழக்கின் சுருக்கம்:-**

(5.1) அ.சா.1 ஐயப்பன் தனது சாட்சியத்தில் கடந்த 08.07.2022-ம் தேதி காலை 11.00 மணியளவில் தான் வீட்டில் இருக்கும் போது எதிரிகள் அனைவரும் வீட்டு வெளியே இருந்த மேற்படி கல்லுக்கால்களை உடைத்தார்கள் என்றும் அப்போது தானும் தனது மனைவி சாட்சி சிவரஞ்சனியும் ஓடி வந்து ஏன் உடைக்கிறீர்கள் என்று கேட்டோம் என்றும் அதற்கு அவர்கள் அப்படித்தான் உடைப்போம் என்று சொல்லி 1 வது எதிரி பாண்டியன் தன் மனைவியை கண்ணத்தில் அறைந்தார் என்றும் எதிரிகள் அனைவரும் இந்த வீட்டில் இருக்கக்கூடாது ஊரை விட்டு ஓடிவிடுங்கள் இல்லையென்றால் உங்களை கொன்று விடுவோம் என்று கொலை மிரட்டல் விடுத்தார்கள் என்றும் பிறகு சாட்சி சேதுராமனும், காளிஸ்வரனும் வந்து விலக்கிவிட்டார்கள் என்றும் பிறகு அன்று மதியம் போலீசாரிடம் புகார் கொடுத்தேன் தன்னிடம் காண்பிக்கப்படும் புகார் தான் கொடுத்தது தான் அதில் உள்ள விவரங்கள் தனக்கு தெரியும். ( புகார் மனு அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது என்றும் போலீசார் தன்னை விசாரித்தார்கள் என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

(5.2) அ.சா.2 சிவரஞ்சனி தனது சாட்சியத்தில் தான் வழங்காவயலில் குடியிருந்து வருகிறேன் என்றும் எதிரிகளை தெரியும்.அ.சா.1 தனது கணவர் என்றும் தன் வீட்டிற்கு பக்கத்தில் உள்ள இடத்தை ஒருவர் எங்களுக்கு கிரயம் எழுதிக் கொடுத்தார் என்றும் அதில் நாங்கள் கல்லுக்கால் ஊன்றி அனுபவித்து வருகிறோம் என்றும் எதிரிகள் அந்த இடத்தை காலி செய்யச் சொல்லி பிரச்சனை செய்தார்கள் என்றும் நாங்கள் நத்தம் இடம் என்றும், காலி செய்ய முடியாது என்றும் சொல்லி மனு

கொடுத்தோம் என்றும் பிறகு பூமாதேவி மற்றும் 1-ம் எதிரி தலைமையில் வீதியை அடைத்து விட்டார்கள் என்றும் அதனால் தாங்கள் வெளியில் வரமுடியவில்லை என்றும் அதனால் தாங்கள் தாசில்தாரிடம் மனு கொடுத்த போது வீதியை அடைத்திருப்பதை எடுக்கச் சொன்னார்கள் என்றும் ஆனால் 08.07.2022-ம் தேதி காலை 11.00 மணியளவில் அடைப்பை எடுக்கும் போது தாங்கள் ஊன்றியிருந்த கல்லுக்கால்களையும் உடைத்து விட்டார்கள் என்றும் ஏன் உடைக்கிறீர்கள் என்று கேட்டபோது 1-ம் எதிரி என் கண்ணத்தில் அறைந்து தேவிடியா என்று அசிங்கமான வார்த்தைகளால் சொல்லி பேசினார் என்றும் சுமார் 10 பேர் கல்லுக்கால்களை உடைத்தார்கள் என்றும் தன் கணவர் அதனால் புகார் கொடுக்கப்போனார் போலீசார் தன்னை விசாரித்தார்கள் என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

(5.3) அ.சா.3 காளீஸ்வரன் தனது சாட்சியத்தில் கடந்த 08.07.2022-ம் தேதி காலை 11.00 மணியளவில் வழங்காவயலில் உள்ள அ.சா.2 ன் வீட்டு அருகே வைத்து 1வது எதிரி தகாத வார்த்தை சொல்லி கண்ணத்தில் அறைந்தார் என்றும் பிறகு அ.சா.1 யை 3 முதல் 6 எதிரிகள் கல்லை தூக்கி அ.சா.1 ன் மேல் போட போனார்கள் என்றும் தானும் சாட்சி சேதுராமனும் விலக்கிவிட்டோம் என்றும் பின்னர் காவல் நிலையம் சென்று புகார் கொடுத்தார்கள் என்றும் போலீசார் தன்னை விசாரித்தார்கள் என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

(5.4) அ.சா.4 பாண்டியராஜன் தனது சாட்சியத்தில் கடந்த 07.08.2022-ம் தேதி மாலை 05.00 மணிக்கு ஆறாவயல் போலீசார் அ.சா.1 னின் ஐயப்பன் வீட்டுக்கு அருகில் வந்து அங்கு கல் உடைத்த குற்ற சம்பவம் தொடர்பாக சம்பவ இடத்தை பார்வையிட்டு மாதிரி வரைபடம் மற்றும் பார்வை மகஜர் தயார் செய்தார்கள் என்றும் அதில் தன்னிடம் கையெழுத்து பெற்றார்கள் என்றும் தன்னிடம் காண்பிக்கப்படும் பார்வை மகஜரில் உள்ள 1 வது கையெழுத்து தன்னுடையது தான்.(மேற்படி பார்வை மகஜர் அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது என்றும் போலீசார் தன்னை விசாரித்தார்கள் என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

(5.5) அ.சா.5 மருது தனது சாட்சியத்தில் இவ்வழக்கின் புலன்விசாரணை அதிகாரியாக புலன்விசாரணை மேற்கொண்டு குற்ற இறுதிஅறிக்கை தாக்கல் செய்தது குறித்து சாட்சியம் அளித்து முதல் தகவல் அறிக்கையை அ.சா.ஆ.3 ஆகவும், பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் ஆகியவற்றை முறையே அ.சா.ஆ.4 மற்றும் 5 ஆகவும், தாக்கல் செய்து சாட்சியம் அளித்துள்ளார்.

(5.6) அ.சா.6 சேதுராமன் தனது சாட்சியத்தில் கடந்த 07.08.2022 ம் தேதி காலை 11 மணி அளவில் அ.சா.1 ன் வீட்டிற்கு அருகில் இரைச்சல் கேட்டது என்றும் தான் தன் வீட்டில் இருந்து அங்கு ஓடிச்சென்றேன் அ.சா1 ற்கும் எதிரிகளுக்கும் பாதை பிரச்சனை தொடர்பாக சண்டை நடந்தது என்றும் அப்போது பிரச்சனை வேண்டாம் என்று தாங்கள் சொல்லிக்கொண்டிருந்தோம் என்றும் அப்போது அ.சா.1 இடத்தில்

இருந்த கல்லுக்காலை எதிரிகள் அனைவரும் உடைத்துவிட்டு கைகலப்பும் நடந்து விட்டது என்றும் அசா1ன் மனைவியை 4ம் எதிரி பாண்டி அடித்துவிட்டார் என்றும் அப்போது உடைந்த கல்லுக்காலை எடுத்து அ.சா1ன் தலையில் போடுவதற்கு 4 வது எதிரி பாண்டி கொண்டு போனார் என்றும் தாங்கள் தடுத்து சமாதனம் செய்தோம் என்றும் பின்னர் ஆறாவயல் போலீசுக்கு போன் செய்தோம் என்றும் அவர்கள் வந்து விசாரித்தார்கள் என்றும் போலீசார் தன்னை விசாரித்தார்கள் என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

6. அரசு தரப்பு சாட்சியங்களிலிருந்தும், ஆவணங்களிலிருந்தும் எதிரிகளுக்கு பாதகமாகத் தோன்றும் அம்சங்கள் மற்றும் சூழ்நிலைகள் குறித்து குவிமுச பிரிவு 313(1)(b) இன் கீழ் வினவ எதிரிகள் சாட்சியங்களை பொய் என மறுத்துரைத்தார்கள். மேலும் எதிரிகள் தமது தரப்பில் சாட்சியங்கள் இல்லை என்று தெரிவித்ததன் அடிப்படையில் எதிரிகள் தரப்பு சாட்சியம் முடிக்கப்பட்டது.

7. இந்த வழக்கில் தீர்வுக்குரிய பிரச்சனை என்னவென்றால், அரசு தரப்பில் எதிரிகள் மீதான குற்றச்சாட்டுகளை தகுநிலை ஐயப்பாட்டிற்கு அப்பாற்பட்டு சந்தேகத்திற்கு இடமில்லாமல் நிரூபணம் செய்யப்பட்டுள்ளதா என்பதேயாகும்?

**8. தீர்வு**

(8.1) இவ்வழக்கின் புகார்தாரரான அ.சா.1 அவருடைய முதல் விசாரணை சாட்சியத்தில் புகாரை வலியுறுத்தும் விதமாக கடந்த 08/07/2022 ம் தேதி காலை 11.00

மணியளவில் தான் வீட்டில் இருக்கும் போது எதிரிகள் அனைவரும் வீட்டு வெளியே இருந்த மேற்படி கல்லுக்கால்களை உடைத்ததாகவும், அப்போது தானும் தனது மனைவி சாட்சி சிவரஞ்சனியும் ஓடி வந்து ஏன் உடைக்கிறீர்கள் என்று கேட்டதாகவும், அதற்கு அவர்கள் அப்படித்தான் உடைப்போம் என்று சொல்லி 1 வது எதிரி பாண்டியன் தன் மனைவியை கண்ணத்தில் அறைந்ததாகவும், எதிரிகள் அனைவரும் இந்த வீட்டில் இருக்கக்கூடாது ஊரை விட்டு ஓடிவிடுங்கள் இல்லையென்றால் உங்களை கொன்று விடுவோம் என்று கொலை மிரட்டல் விடுத்ததாகவும் சாட்சியம் அளித்துள்ளார்.

(8.2) அதேபோல் பாதிக்கப்பட்ட நபரான அ.சா.2 ம் புகாரை வலியுறுத்தும் விதமாகவும் அ.சா.1ன் சாட்சியத்தை உறுதிப்படுத்தும் விதமாகவும் எதிரிகளை தெரியும் என்றும் தன்வீட்டிற்கு பக்கத்தில் உள்ள இடத்தை ஒருவர் தங்களுக்கு கிரயம் எழுதிக் கொடுத்ததாகவும் அதில் தாங்கள் கல்லுக்கால் ஊன்றி அனுபவித்து வருவதாகவும், ஆனால் 08.07.2022-ம் தேதி காலை 11.00 மணியளவில் வீதியை அடைத்திருக்கும் அடைப்பை எடுக்கும் போது தாங்கள் ஊன்றியிருந்த கல்லுக்கால்களையும் உடைத்து விட்டதாகவும் ஏன் உடைக்கிறீர்கள் என்று கேட்டபோது 1-ம் எதிரி தன் கண்ணத்தில் அறைந்து தேவிடியா என்று அசிங்கமான வார்த்தைகளால் சொல்லி பேசியதாகவும் சுமார் 10 பேர் கல்லுக்கால்களை உடைத்ததாகவும் சாட்சியம் அளித்துள்ளார்.

(8.3) கண்ணுற்ற சாட்சியாக விசாரிக்கப்பட்டுள்ள அ.சா.3 ம் அ.சா.1, 2 ஆகியோரின் சாட்சியத்தை உறுதிப்படுத்தும் விதமாக கடந்த 08.07.2022-ம் தேதி காலை 11.00 மணியளவில் வழங்காவயலில் உள்ள அ.சா.2 ன் வீட்டு அருகே வைத்து 1 வது எதிரி தகாத வார்த்தை சொல்லி கன்னத்தில் அறைந்ததாகவும் பிறகு அ.சா.1 யை 3 முதல் 6 எதிரிகள் கல்லை தூக்கி அ.சா.1 ன் மேல் போட போனாதாகவும் தானும் சாட்சி சேதுராமனும் விலக்கிவிட்டதாகவும் சாட்சியம் அளித்துள்ளார். மற்றொரு கண்ணுற்ற சாட்சியாக விசாரிக்கப்பட்டுள்ள அ.சா.6 கடந்த 07.08.2022 ம் தேதி காலை 11 மணி அளவில் அ.சா.1 ன் வீட்டிற்கு அருகில் இரைச்சல் கேட்டதாகவும், தான் தன் வீட்டில் இருந்து அங்கு ஓடிச்சென்றதாகவும், அ.சா1 ற்கும் எதிரிகளுக்கும் பாதை பிரச்சனை தொடர்பாக சண்டை நடந்ததாகவும் அப்போது பிரச்சனை வேண்டாம் என்று தாங்கள் சொல்லிக்கொண்டிருந்ததாகவும், அப்போது அ.சா.1 இடத்தில் இருந்த கல்லுக்காலை எதிரிகள் அனைவரும் உடைத்துவிட்டு கைகலப்பும் நடந்து விட்டதாகவும், அசா1 ன் மனைவியை 4 ம் எதிரி பாண்டி அடித்துவிட்டதாகவும், அப்போது உடைந்த கல்லுக்காலை எடுத்து அ.சா1 ன் தலையில் போடுவதற்கு 4 வது எதிரி பாண்டி கொண்டு போனதாகவும் சாட்சியம் அளித்துள்ளார்.

(8.4) இவ்வாறாக அ.சா.1, 2, 3 மற்றும் 6 ஆகியோர் அரசு தரப்பு வழக்கிற்கு ஆதரவாக சாட்சியம் அளித்துள்ள நிலையில் எதிரிகள் தரப்பில் சம்பவமானது ஆக்கிரமிப்பை அகற்ற அரசால் நடவடிக்கை எடுக்கப்பட்டபோது நடைபெற்றுதாகவும் எதிரிகள் ஆக்கிரமிப்பை அகற்ற மனு கொடுத்த முன் விரோதத்தினால் எதிரிகள் மீது

பொய்யாக இந்த புகார் கொடுக்கப்பட்டுள்ளதாக ஒரு வாதம் முன் வைக்கப்பட்டுள்ளது. அ.சா.ஆ.1 புகாரில் புகார்தாரர் தரப்பில் தேவகோட்டை துணை தாசில்தாரால் கடந்த 23/04/2022 ம் தேதி சர்வே எண். 137/4-ல் தான் அனுபவம் செய்து வரும் இடத்தை காலி செய்ய அறிவிப்பு கொடுக்கப்பட்டதாகவும் தான் மேற்படி அறிவிப்பை எதிர்த்து மாண்புமிகு மதுரை உயர்நீதிமன்றத்தில் WP(MD) No. 10215/2022 மற்றும் WP(MD) NO. 7251/22 என்ற எண்ணில் மனு தாக்கல் செய்து கடந்த 18/05/2022 ம் தேதி தேவகோட்டை துணை தாசில்தாருக்கு விசாரணை செய்து உத்தரவு பிறப்பிக்க உத்தரவிடப்பட்டிருந்ததாக குறிப்பிட்டுள்ளார். அவ்வாறாக சம்பவ இடமான சர்வே எண். 137/4-ஐ பொறுத்து அறிவிப்பு கொடுக்கப்பட்டதை புகாரிலேயே ஒப்புக்கொண்டுள்ள நிலையில் அறிவிப்பின் அடிப்படையில் அரசால்தான் கல்லுக்கால் வேலி அமைத்து செய்யப்பட்டிருந்ததாக சொல்லப்படும் ஆக்கிரமிப்பானது அகற்றப்பட்டது என்பதை நிரூபிக்க வேண்டியது அவ்வாறான எதிர் வாதத்தை முன் எடுத்துள்ள எதிரிகளின் கடப்பாடு ஆகும். ஆனால் சம்பவம் நடைபெறவில்லை என்றும் அரசு அதிகாரிகளால் தான் கல்லுக்கால்கள் முதலிய ஆக்கிரமிப்பு அகற்றப்பட்டது என்ற எதிரிகளின் எதிர் வாதம் அ.சா.1, 2, 5 மற்றும் 6 ஆகியோரால் குறுக்கு விசாரணை சாட்சியத்தில் மறுக்கப்பட்டுள்ளது. அத்தகைய சூழ்நிலையில் எதிரிகள் கல்லுக்கால்களை உடைத்து இந்த வழக்கில் கண்ட சம்பவம் நடைபெற்றதாக அரசு தரப்பில் வழக்கு முன் எடுக்கப்பட்டுள்ள நிலையில் எதிரிகள் தரப்பில் குறிப்பிடுவது போல் அரசு அதிகாரிகளால்தான் ஆக்கிரமிப்பு அகற்றப்பட்டது எனில் அதற்குறிய

ஆவணங்களை சமர்பிக்க வேண்டியது அந்த வாதத்தை எடுத்துள்ள எதிரிகளின் பொறுப்பு ஆகும்.

(8.5) மேலும் அ.சா.5ன் குறுக்கு விசாரணை சாட்சியத்தில் 6ம் எதிரி பூமாதேவி மாண்புமிகு மதுரை உயர்நீதிமன்றத்தில் கல்லுக்கால்களை அகற்றக்கோரி உத்தரவு பெற்றதன் பெயரில் தான் அக்கிரமிப்பு அகற்றப்பட்டதாக ஒரு வாதம் முன்வைக்கப்பட்டுள்ளது. ஆனால் 6ம் எதிரி தரப்பில் அவ்வாறு மாண்புமிகு மதுரை உயர்நீதிமன்றத்தில் இருந்து உத்தரவு பெற்றதாக சொல்லப்படும் வழக்கின் எண்ணோ அல்லது உத்தரவு நகலோ இந்த வழக்கில் சமர்பிக்கப்படவில்லை. மேலும் சம்பவத்தின்போது உடைக்கப்பட்ட கல்லுக்கால்கள் அ.சா.1 ஆல் ஏற்படுத்தப்பட்டது என்பதை எதிரிகள் தரப்பில் மறுக்கவில்லை. எதிரிகள் தரப்பில் சம்பவம் நடந்த இடம் அரசுக்குப் பாத்தியப்பட்ட இடம் என்பதே அவர்களுடைய வாதம் ஆகும். எதிரிகள் தரப்பில் குறிப்பிடுவதுபோல் சம்பவ இடம் அரசுக்கு பாத்தியப்பட்ட இடமாக இருந்ததை புகார்தாரர் ஆக்கிரமிப்பு செய்து வைத்திருப்பதாகவே எடுத்துக்கொண்டாலும் அது குறித்து அரசின்மூலம் சட்டப்படியாகவே நடவடிக்கை எடுத்து சட்டத்திற்கு உட்பட்டே ஆக்கிரமிப்பை அகற்ற வேண்டும். சம்பவம் நடந்த இடம் யாருக்கு பாத்தியப்பட்டது என்பது குறித்து நீதிமன்றமே தீர்மாணிக்க இயலும் என்ற நிலையில் அ.சா.1 தான் கல்லுக்கால் வேலி அமைத்து அனுபவிப்பதாக சொல்லும் நிலையில் எதிரிகளும் மேற்படி அனுபவத்தை ஆக்கிரமிப்பு என்று குறிப்பிடும் நிலையில், நிலத்தில் புகார்தாரர் கல்லுக்கால் அமைத்து அனுபவத்தில் இருந்துள்ளார் என்பது

தெளிவாகிறது. மேற்படி அனுபவமானது ஆக்கிரமிப்பா அல்லது சட்டப்படியான அனுபவமா என்பது குறித்து நீதிமன்றத்தின் மூலம் தீர்வு காண்பதும், ஆக்கிரமிப்பு என்று உறுதிசெய்யப்படும் பட்சத்தில் அதை சட்டப்படியாக அகற்றுவதற்கான நடவடிக்கைகளை எடுப்பதும் அரசின் கடமையாகும். அதில் தனிநபர்களான எதிரிகளுக்கு சட்டத்திற்கு மீறிய வகையில் அ.சா.1ன் அனுபவத்தில் இருக்கும் இடத்தில் கல்லுக்கால்களை உடைத்து அகற்ற எந்த அதிகாரமும் கிடையாது.

(8.6) இவ்வழக்கில் எதிரிகள் தரப்பில் அரசு தரப்பு சாட்சிகளின் குறுக்கு விசாரணையில் சம்பவம் வீடியோ மற்றும் போட்டோ எடுக்கப்பட்டதாகவும் மேற்படி வீடியோ மற்றும் போட்டோவை பார்த்தால் யார் முன்னிலையில் கல்லுக்கால்கள் அகற்றப்பட்டது என்பது தெரியவரும் என்றும் ஆனால் அரசு தரப்பில் மேற்படி வீடியோ மற்றும் போட்டோ தாக்கல் செய்யப்படவில்லை என்றும் வாதம் முன்வைக்கப்பட்டுள்ளது. எதிரிகள் தரப்பில் அ.சா.3ன் குறுக்கு விசாரணை சாட்சியத்தில் வீடியோ அ.சா.1 தரப்பாலும் எதிரிகள் தரப்பாலும் எடுக்கப்பட்டதாக கேள்வி கேட்கப்பட்டுள்ளதும் கவனிக்கத்தக்கது ஆகும். அ.சா.1ன் தரப்பில் எடுக்கப்பட்டதாக சொல்லப்படும் வீடியோவைப் பொறுத்தவரையில் மேற்படி வீடியோவானது இவ்வழக்கில் தாக்கல் செய்யப்படவில்லை என்ற ஒரே காரத்திற்காக மட்டுமே அ.சா.1, 2, 3 மற்றும் 6 ஆகியோரின் சாட்சியத்தை சந்தேகிக்கவோ புறம்தள்ளிவிடவோ முடியாது. மேலும் எதிரிகள் தரப்பில் அரசு அதிகாரிகளால்தான் ஆக்கிரமிப்பு அகற்றப்பட்டது என்றும் வழக்கு பொய் வழக்கு என்றும் எதிர்வாதம்

செய்யப்பட்டுள்ள நிலையில் எதிரிகள் தரப்பில் எடுக்கப்பட்டதாக அ.சா.3 ன் குறுக்கு விசாரணை சாட்சியத்தில் குறிப்பிடப்பட்டும் வீடியோ பதிவை ஆக்கிரமிப்பு அரசால்தான் அகற்றப்பட்டதா என்பதை தெளிவுபடுத்தும் விதமாக சமர்பித்து இருக்கலாம். எது எவ்வாறு இருப்பினும் அ.சா.1, 2, 3 மற்றும் 6 ஆகியோரின் சாட்சியத்தையும் அதன் நம்பகத்தன்மையையும் சந்தேகிக்கும் விதமாக அவர்களின் குறுக்கு விசாரணை சாட்சியத்தில் எந்த பொருண்மைகளும் அமையாத நிலையில் வீடியோ பதிவு தாக்கல் செய்யப்படவில்லை என்ற அடிப்படையில் மட்டுமே பாதிக்கப்பட்ட சாட்சியங்களையும் கண்ணுற்ற சாட்சியங்களையும் சந்தேகிக்க இயலாது.

(8.7) அ.சா.1 புகாரை வலியுறுத்தும் விதமாக சாட்சியம் அளித்துள்ள நிலையில் அவருடைய சாட்சியத்தை உறுதிப்படுத்தும் விதமாக அ.சா.2, 3 ஆகியோரின் சாட்சியம் அமைந்துள்ளது. அ.சா.4 அவருடைய முதல் விசாரணை சாட்சியத்தில் சம்பவம் நடைபெற்ற தேதி 07/08/2022 ம் தேதி என்று அரசு தரப்பு வழக்கிலிருந்து வேறுபட்டு குறிப்பிட்டுள்ள போதிலும் சம்பவம் நடைபெற்ற காலக்கட்டத்தில் இருந்து ஏறத்தாள 4 வருடங்கள் கழித்து சாட்சியம் அளித்திருப்பதை கருத்தில்கொள்கையில் மேற்படி தேதியில் உள்ள வேறுபாடை பெரிய முரண்பாடாகவோ அ.சா.6 ன் சாட்சியத்தை கேள்விக்குள்ளாக்குவதாகவோ கருத இயலாது. அதேபோல் அ.சா.6 எதிரிகளுக்கும் அ.சா.1 க்கும் பாதை பிரச்சனை தொடர்பாக சண்டை நடந்ததாகவும் அப்போது அ.சா.1 ன் இடத்திலிருந்த கல்லுக்காலை எதிரிகள் அனைவரும்

உடைத்து விட்டு கைகலப்பு நடந்ததாகவும் அ.சா.1 ன் மனைவியை 4 வது எதிரி அடித்து விட்டதாகவும் உடைந்த கல்லுக்காலை எடுத்து அ.சா.1 ன் தலையில் போடுவதற்காக கொண்டுபோனதாகவும் சாட்சியம் அளித்துள்ளார். அ.சா.6 4 வது எதிரிதான் அ.சா.1 ன் மனைவியை அடித்ததாக அரசு தரப்பு வழக்கிலிருந்து வேறுபட்டு சாட்சியம் அளித்துள்ளபோதிலும் அ.சா.6 ன் சாட்சியமானது எதிரிகள் அ.சா.1 டன் பிரச்சனையில் ஈடுபட்டதையும், கல்லுக்கால்களை உடைத்ததையும் உறுதிப்படுத்தும் விதமாக அமைந்துள்ளது. அ.சா.1,2,3 மற்றும் 6 ஆகியோரின் சாட்சியம் குறுக்கு விசாரணையிலும் தகர்க்கப்படவில்லை. எனவே எதிரிகள் அனைவரும் சேர்ந்து அ.சா.1 வைத்திருந்த கல்லுக்கால்களை உடைத்துள்ளார்கள் என்பதும் அ.சா.2 ஐ 1 வது எதிரி கண்ணத்தில் அறைந்துள்ளார் என்பதும் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபணமாகிறது. எதிரிகள் பாதையிலுள்ள அடைப்புகளை அகற்றிவிட்டு அ.சா.1 வைத்துள்ள கல்லுக்கால்களையும் சேதப்படுத்தி அ.சா.1, 2 ஆகியோருடன் பிரச்சனையில் ஈடுபடவேண்டும் என்ற பொதுவான நோக்கத்துடன் ஒன்றாக கூடி சம்பவ இடத்திற்கு சென்று அ.சா.2 யும் தாக்கி வன்முறையில் ஈடுபட்டுள்ளார்கள் என்பதும் அரசு தரப்பு சாட்சியங்களில் இருந்து சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபனமாகிறது. எனவே எதிரிகள் மீதான இதச பிரிவுகள் 427 மற்றும் 147 ன் கீழான குற்றச்சாட்டுக்களும் 1 வது எதிரி மீதான இதச பிரிவு 323 ன் கீழான குற்றச்சாட்டும் அரசு தரப்பில் நிரூபிக்கப்பட்டுள்ளதாக தீர்வு காணப்படுகிறது.

(8.8) 1 வது எதிரி மீதான பிரிவு 4 of TNPHW Act-ன் கீழான குற்றச்சாட்டைப் பொருத்தவரையில் அ.சா.1, 2 ,3 ஆகியோரின் சாட்சியத்தில் இருந்து 1 வது எதிரி அ.சா.2 ஐ கண்ணத்தில் அறைந்துள்ளார் என்பதும் அ.சா.2 ன் சாட்சியத்தில் இருந்து 1 வது எதிரி அ.சா.1 ஐ தேவிடியா என்று பேசியுள்ளார் என்பதும் தெரியவருகிறது. இவ்வழக்கின் சம்பவ இடமானது அ.சா.1 ன் வீட்டிற்கு பக்கத்தில் உள்ள கல்லுக்கால் வேலி அமைக்கப்பட்ட திறந்த வெளி என்பது அரசு தரப்பு சாட்சியங்களில் இருந்தும் அ.சா.ஆ.4 பார்வை மகஜரில் இருந்தும் அ.சா.ஆ.5 மாதிரி வரைபடத்தில் இருந்தும் தெரியவருகிறது. அவ்வாறு பொதுமக்கள் பார்வைக்குட்பட்ட வகையிலும் பொதுமக்கள் வந்துசெல்லக்கூடிய அளவிலுமான இடத்தில் சம்பவம் நடைபெற்றுள்ளது. எனவே சம்பவ இடத்தை பிரிவு 4 of TNPHW Act-க்கு உட்பட்ட பொது இடமாக இந்நீதிமன்றம் கருதுகிறது. மேலும் 1 வது எதிரி தேவிடியா என்று பேசி அ.சா.2 ஐ பொது இடத்தில் வைத்து கண்ணத்தில் அறைந்துள்ள செயலானது பிரிவு 2(a)-ல் கண்ட Harrassment -ன் விளக்கத்திற்கு உட்பட்ட வகையிலான அநாகரிகமான செயல் என்று இந்நீதிமன்றம் கருதுகிறது. எனவே 1 வது எதிரி மீதான பிரிவு 4 of TNPHW Act-ன் கீழான குற்றச்சாட்டு அரசு தரப்பில் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்கப்பட்டுள்ளதாக இந்நீதிமன்றம் தீர்வு காண்கிறது.

(8.9) 1 வது எதிரி மீதான இதச பிரிவு 294(b)-ன் கீழான குற்றச்சாட்டைப் பொருத்தவரையில் அ.சா.2 1 வது எதிரி அசிங்கமான வார்த்தைகளால் பேசியதாக சாட்சியம் அளித்துள்ளபோதிலும் அதனால் அறுவறுப்புணர்வு அடைந்ததாக எந்த

சாட்சியமும் அமையவில்லை. கண்ணுற்ற சாட்சியான அ.சா.3 1வது எதிரி தகாத வார்த்தை பேசினார் என்று மட்டுமே குறிப்பிட்டுள்ளார். 1வது எதிரி என்ன வார்த்தைகள் பேசினார் என்பதை குறிப்பிட்டு சாட்சியம் அளிக்கவில்லை. எனவே அ.சா.3ன் சாட்சியமும் மற்றவர்களுக்கு அறுவறுப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் 1வது எதிரியின் செயல்பாடு இருந்ததாக நிரூபிக்கும் விதமாக அமையவில்லை என்று இந்நீதிமன்றம் கருதுகிறது. 3, 4 எதிரிகள் மீதான இதச பிரிவு 294(b)-ன் கீழான குற்றச்சாட்டைப் பொருத்தவரையில் 3,4வது எதிரிகள் ஆபாசமான வார்த்தைகள் பேசியதாக எந்த சாட்சியமும் அமையவில்லை. எனவே 1,3,4வது எதிரிகள் மீதான இதச பிரிவு 294(b)-ன் கீழான குற்றச்சாட்டு அரசு தரப்பில் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்கப்படவில்லை என்று இந்நீதிமன்றம் தீர்வு காண்கிறது.

(8.10) 3,4வது எதிரிகள் மீதான இதச பிரிவு 506(1)ன் கீழான குற்றச்சாட்டைப் பொருத்தவரையில் அ.சா.1 எதிரிகள் அனைவரும் கொலை மிரட்டல் விடுத்ததாக சாட்சியம் அளித்துள்ளபோதிலும் அதனால் அச்ச உணர்வு ஏற்பட்டதாக எந்த சாட்சியமும் அளிக்கவில்லை. ஏனைய சாட்சிகள் யாரும் எதிரிகள்கொலை மிரட்டல் விடுத்ததாக எந்த சாட்சியமும் அளிக்கவில்லை. எனவே 3,4வது எதிரிகள் மீதான இதச பிரிவு 506(1)ன் கீழான குற்றச்சாட்டு அரசு தரப்பில் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்கப்படவில்லை என்று இந்நீதிமன்றம் தீர்வு காண்கிறது.

9) எதிரிகள் அனைவரும் இதச பிரிவுகள் 147, 427 ன் கீழும், 1 வது எதிரி இதச பிரிவு 323 மற்றும் பிரிவு 4 of TNPHW Act-ன் கீழ் குற்றவாளிகள் என்று தீர்வு காணப்பட்டு உள்ளதால் எதிரிகளிடம் அவர்களுக்கு வழங்கப்படவுள்ள தண்டனைகள் குறித்து வினவியபோது எதிரிகள் கீழ்க்கண்டவாறு பதில் அளித்தார்கள்.

1 வது எதிரி - "நான் அந்த மாதிரி எதுவும் செய்யவில்லை, அவர்கள் இரண்டு பேருமே வீடியோ எடுத்துக்கொண்டிருந்தார்கள்".

2 வது எதிரி - "அதுபோல் எதுவும் நடக்கவில்லை".

3 வது எதிரி - "அதுபோல் எதுவும் நடக்கவில்லை".

4 வது எதிரி - "நாங்கள் எந்த அடிபிடிக்கும் போகவில்லை. எந்த அடிபிடியும் நடக்கவில்லை".

5 வது எதிரி - "ஆக்கிரமிப்பை நாங்கள் அகற்றச்சொன்னோம் அதனால் எங்கள் மீது பொய்யாக வழக்கு போட்டுள்ளார்கள்".

6 வது எதிரி - "அடிபிடி சண்டை எதுவும் நடக்கவில்லை".

7 வது எதிரி - "பொய்யான வழக்கு தாக்கல் செய்துள்ளார்கள்".

8 வது எதிரி - "பொய்யான வழக்கு தாக்கல் செய்துள்ளார்கள். சண்டை நடக்கவில்லை".

9 வது எதிரி - "எதுவும் நடக்கவில்லை. வேண்டுமென்றே வழக்கு போட்டுள்ளார்கள்".

10 வது எதிரி - "சண்டை எதுவும் நடக்கவில்லை. இது பொய் வழக்கு".

10) இவ்வழக்கில் எழுந்துள்ள குற்றச்சாட்டுகளின் தன்மையையும், எதிரிகள் அனைவரும் பொதுவான நோக்கத்துடனும் திட்டமிடலுடனும் சம்பவத்தில் ஈடுபட்டுள்ளதையும், சம்பவத்தில் பெண்ணான அ.சா.2 ஐ பொது இடத்தில் வைத்து தாக்கியுள்ளதையும் வழக்கின் தன்மை மற்றும் சூழ்நிலைகளை கருத்தில் கொண்டும் எதிரிகளுக்கு நன்னடத்தை சட்டத்தின் கீழ் எந்த பலனும் கிடைக்கத்தக்கது அல்ல என்றும், எனவே எதிரிகளுக்கு தகுந்த தண்டனை வழங்கப்பட வேண்டுமென்றும் இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

11) எதிரிகளுக்கான தண்டனையானது குற்றச்சாட்டுக்களின் தன்மையையும், சம்பவமானது சொத்து மற்றும் பாதை பிரச்சனையின் தொடர்ச்சியாக ஏற்பட்டுள்ளதையும் கருத்தில் கொண்டு இந்நீதிமன்றத்தால் தீர்மானிக்கப்படுகிறது.

**12) முடிவாக, 1 வது எதிரி இதச பிரிவு 294(b)-ன் கீழும், 3,4 வது எதிரிகள் இதச பிரிவுகள் 294(b), 506(1)-ன் கீழும் குற்றவாளிகள் அல்ல என்று தீர்மானித்து எதிரிகளை மேற்படி குற்றச்சாட்டுக்களைப் பொறுத்து பி.என்.எஸ்.எஸ் பிரிவு 271(1)-ன் கீழ் விடுதலை செய்து இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கிறது. 1 முதல் 10 வரையிலான எதிரிகள் இதச பிரிவு 147, 427 ன் கீழ் குற்றவாளி என்று தீர்மானித்து எதிரிகளுக்கு இதச பிரிவு 147-ன் கீழான குற்றச்சாட்டிற்கு தலா ரூ. 2000/-ம் அபராதம் விதித்தும் அபராதம் செலுத்த தவறும் பட்சத்தில் 2 மாதம் மெய்க்காவல் சிறை தண்டனை விதித்தும், இதச பிரிவு 427-ன் கீழான குற்றச்சாட்டிற்கு தலா ரூ. 3000/-ம் அபராதம்**

**விதித்தும் அபராதம் செலுத்த தவறும் பட்சத்தில் 2 மாதம் மெய்க்காவல் சிறை தண்டனை விதித்தும், 1 வது எதிரி இதச பிரிவு 323 மற்றும் பிரிவு 4 of TNPHW Act ன் கீழ் குற்றவாளி என்று தீர்மானித்து 1 வது எதிரி இதச பிரிவு 323 ன் கீழான குற்றச்சாட்டிற்கு ரூ.1,000/- அபராதம் விதித்தும் அபராதம் செலுத்த தவறும் பட்சத்தில் 1 மாதம் மெய்க்காவல் சிறைதண்டனை விதித்தும், 1 வது எதிரி பிரிவு 4 of TNPHW Act ன் கீழான குற்றச்சாட்டிற்கு ரூ.10,000/- அபராதமும் 8 மாதம் மெய்க்காவல் சிறை தண்டனை விதித்தும் அபராதம் செலுத்த தவறும் பட்சத்தில் மேலும் 2 மாதம் மெய்க்காவல் சிறைதண்டனை அனுபவிக்க வேண்டும் என்றும், பி.என்.எஸ்.எஸ் பிரிவு 271(2)ன் கீழ் உத்தரவிடப்படுகிறது.**

இந்த தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு என்னால் சரிபார்க்கப்பட்டு இன்று 2026-ம் ஆண்டு ஜுன் திங்கள் 30-ம் நாள் என்னால் திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

POORNIMA Digitally signed by POORNIMA Date: 2026.06.30 19:40:22 +0530

**நீதித்துறை நடுவர்**

**தேவகோட்டை.**

**அரசு தரப்பு சாட்சிகள்:**

| S.No | Witness of the Prosecution | How examined | Description of the Witness |
|---|---|---|---|
| 1. | ஐயப்பன் | அ.சா.1 | புகார்தாரர் |
| 2. | சிவரஞ்சனி | அ.சா.2 | கண்ணுற்ற சாட்சி |

| | | | |
|---|---|---|---|
| 3. | காளீஸ்வரன் | அ.சா.3 | கண்ணுற்ற சாட்சி |
| 4. | பாண்டியராஜன் | அ.சா.4 | பார்வை மகஜர் சாட்சி |
| 5. | மருது | அ.சா.5 | விசாரணை அதிகாரி |
| 6. | சேதுராமன் | அ.சா.6 | கண்ணுற்ற சாட்சி |

**Judicial Form No. 68**

**அரசு தரப்பு சான்றாவணங்கள்:**

| S.No | Description of the exhibit | Date when the exhibit was filed in the case | How marked | By whom filed | Remarks |
|---|---|---|---|---|---|
| 1. | புகார் மனு | 23/07/2025 | அ.சா.ஆ.1 | அரசு தரப்பு | அசல் |
| 2. | பார்வை மகஜர் | 13/11/2025 | அ.சா.ஆ.2 | அரசு தரப்பு | அசல் |
| 3. | முதல் தகவல் அறிக்கை | 02/03/2026 | அ.சா.ஆ.3 | அரசு தரப்பு | அசல் |
| 4. | பார்வை மகஜர் | 02/03/2026 | அ.சா.ஆ.4 | அரசு தரப்பு | அசல் |
| 5. | மாதிரி வரைபடம் | 02/03/2026 | அ.சா.ஆ.5 | அரசு தரப்பு | அசல் |

**அரசு தரப்பு சான்றுப் பொருள்: இல்லை**

**எதிரி தரப்பு சாட்சி,சான்றாவணம், சான்றுப் பொருள் - இல்லை**

POORNIMA Digitally signed by POORNIMA Date: 2026.06.30 19:40:29 +0530

**நீதித்துறை நடுவர்**

**தேவகோட்டை.**

**பின்குறிப்பு:-**

1. எதிரி விசாரணை காலத்தில் பிணையில் இருந்தார்.

2. வழக்கின் முடிவு காவல்துறைக்கு தெரிவிக்கப்பட்டது.

3.விசாரணை காலத்தில் சாட்சிகள் யாரும் 3 நாட்களுக்கு மேல் நிறுத்தி வைக்கப்படவில்லை.